அனுதாபத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். நாமும் நம்முடைய அனுதாபத்தையும் அஞ்சலியையும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். தக்க நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கின்றதாலும், சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குப் போடப்பட்டு அது புலன் விசாரணையில் இருப்பதாலும், அது குறித்து மேலும் இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

(முற்பகல் 11-20)

3. அறிவிப்புகள்.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன வடிவினை பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, மேலவையின் இசைவிற்காக பேரவைத் தலைவரின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகள் பேரவைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன :

1. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப் பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1981).

3. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1981).